PR/2019/11/T

# ஜப்பான் தூதரகம்

இல .20, ஸ்ரீமத் ஆர்.ஜி .சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி :94-11-269-3831~3 தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல் :cultujpn@sltnet.lk

**மார்ச் 06, 2019**

## ஊடக அறிக்கை

## சிறப்பாக நடைபெற்ற ஜப்பானிய கலாச்சார கண்காட்சி-2019

இலங்கையின் ஜப்பானிய தூதுவராலயம், ஜப்பானிய ஒருமைப்பாட்டுச் சங்கம் மற்றும் இலங்கை ஜப்பானிய வர்த்தக மற்றும் தொழிற்துறை சங்கம் ஆகியன இணைந்து மார்ச் மாதம் 2 ஆம் திகதி 2019 அன்று கொழும்பு 7, சுதந்திர சதுக்க ஆர்கேட் (Arcade) இல் ஜப்பானிய கலாச்சார கண்காட்சியினை ஏற்பாடுசெய்திருந்தது.

இந்த கலாச்சார கண்காட்சியின் போது 2019ம் ஆண்டிற்கான 25வது புங்கா (கலாச்சார) விருதுகள் விழா நடைபெற்றது. பிரதம அதிதியாக வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் சஜித பிரேமதாச பங்கேற்று சிறப்பித்தார். இவ் விருது 1993 ஆம் ஆண்டு ஜப்பான்– இலங்கை நட்புறவு கலாச்சார நிதியத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. இந் நிதியம் இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிற்கிடையேயான அந்தந்த கலை கலாச்சாரங்களின் பரஸ்பர புரிதலினை வசதிப்படுத்துவதன் ஊடாக நட்பை மேம்படுத்தவும் அமைக்கப்பட்டது.

பல்வேறு கலாச்சார சாதனைகளைப் புரிந்தமைக்காக ஐந்து கலைஞர்கள் இந்த புகழ்பூத்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கலாநிதி. இந்திக்க பேர்டினன்டோ நாடகம் ( திரைப்படம்) இயக்குநர்

திருமதி.செல்வராஜ் லீலாவதி -நாடகம் (நடிகை, இயக்குநர், நடன ஒருங்கிணைப்பாளர்)

திரு.அனுஜ மதுசங்க டி சில்வா- திரைப்படம் மற்றும் விளம்பரம் ( சிறப்பு விளைவுகளை உருவாக்கும் கிரபிக் டிசைனர் )

திருமதி. தஜிதாங்கனி டயஸ் (நடனக் கலைஞர்) கண்டிய நடனம்

கலாநிதி. பிரியந்த உடகெதர ( ஓவியம் மற்றும் காட்சிக் கலை)

ஜப்பானிய கலாச்சார நிகழ்ச்சியைத் தொடர்ந்து இடம்பெற்ற விருது வழங்கல் விழா, ஜப்பானிய பாரம்பரிய தற்காப்புக்கலையுடன் தற்காலத்தில் பிரபலமாக திகழும் ஜே-பொப் மற்றும் கொஸ் பிளே நிகழ்ச்சிகளின் கலவையாக இடம்பெற்றது.. 'ஸ்பிரிடெட் எவே-சென் டு ஷிஹிரோ நோ கமிகாகுஷி' (Animation Film “Spirited Away-Sen to Chihiro no Kamikakushi) ஆகிய ஜப்பானின் மிக விருப்பப்படும் அனிமேஷன் திரையிடப்பட்டன.

1000ற்கும் மேற்பட்டவர்கள் இந்தக் கண்காட்சியைக் காண வருகைதந்திருந்ததுடன் இலங்கை மற்றும் ஜப்பானிய கலாச்சாரங்களின் செழிப்பான அம்சங்களை அனுபவித்து மகிழ்ந்தனர். பல்வேறு ஆற்றல்கொண்ட இலங்கையர்களின் ஆற்றல்வெளிப்பாடுகளை புத்துணர்வுதரும் மாலைநேரக் காற்றினை சுவாசித்தவாறே அனுபவித்து மகிழ்ந்தனர்.

*************************************************************

மேலதிக விபரங்களுக்கு கலாச்சாரப் பிரிவினரைத் தொடர்புகொள்க

Tel: 011-269-3831~3 (ext.223)